மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.230/2022</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>13.08.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதிகள் சுகப்பிரியா மற்றும் ராஜேஷ் ஆகியோர் எனக்கு என்ன உறவு முறை என்றால் மகள் மற்றும் மருமகன் ஆவார்கள். சென்னிமலை கவுண்டர் என்பவர் யார் என்றால் அவர் எனது தகப்பன் வழி பாட்டனார். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் எங்கள் குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணமா என்றால் ஆமாம். நானும் என் சகோதரியும் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் வெள்ளகோவில் கிராமம் பழைய க.ச.எண்.312/1 தற்போதைய ரிசர்வே எண்.312/1F1, 312/1F2 என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கும், 1ம் வாதிக்கும் பி அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் ரீ.ச.எண்.312/1f1 இல் புஞ்சை ஏக்கர் 0.83–1/2 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகம் ஒதுக்கப்பட்டுள்ள 0.83–1/2 செண்ட் நிலத்திற்கு வாசா.ஆ.1 ஆவணத்தில் செக்பந்தியாக 312/1G, 312/1E காலைகளுக்கு வடக்கு என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

3. எனது சகோதரி மல்லிகாவிற்கு எனது பூமிக்கு கிழபுறமாக உள்ள பூமிகள் ஒதுக்கப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏ ஷெட்யூல் மல்லிகாவிற்கு ஒதுக்கப்பட்ட பூமிக்கான செக் பந்தியில் கீழ்பாக பூமிக்கு கிழக்கும், தெற்கும் என செக்குபந்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட பூமிக்கு கிளபுறமும் தென்புறமும் மல்லிகாவிற்கு பூமிகள் ஒதுக்கப்பட்டதாக தான் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் நானும் என் மகளும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளோம் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு செக்குபந்தியாக ரீ.ச.எண்.312/1G1, 312/1E காலைகளுக்கும் சுகப்பிரியா பாகத்திற்கும் கிழக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பாகம் ஒதுக்கப்பட்ட பூமிகளுக்கு தென்புறம் தான் என் மகள் சுகப்பிரியாவிற்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் சுகப்பிரியாவிற்கு பாகம் ஒதுக்கப்பட்ட பூமிகளுக்கு தென்புறத்தில் பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்ட பூமி அமைந்திருந்தது என்றால் ஆமாம். சுகப்பிரியா பூமிக்கு தென்புறத்தில் 25 அடி அகல தென்வடல் பொதுத்தடம் உள்ளதா என்றால் இல்லை.

5. அந்தத் தடம் தாவா சொத்திற்கு மேல் புறத்தில் அமைந்துள்ளது. சுகப்பிரியா பாகப்பிரிவினையில் தனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளில் பொதுவில் பாதி சொத்துக்களை பொறுத்து தனது கணவர் பெயருக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 312/1F1 காலைக்கு வடபுறத்தில் தான் 312/1F2 உள்ளது என்றால் ஆமாம்.

6. வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் எனக்கு பொதுவில் பாத்தியப்பட்ட 5 சென்ட் நிலத்தில் பொதுவில் 2–½ சென்ட் நிலத்தை என் மகளுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 2–½ சென்டு நிலத்தை வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் 1, 2 வாதிகளுக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் கண்டுள்ள 5 சென்ட் நிலத்தை தான் தாவா சொத்து விவரத்தில் இரண்டாவது அயிட்ட சொத்தாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

7. தாவா வழக்குரை இரண்டாவது அயிட்ட சொத்திற்கு தென்புறத்தில் தான் முதலாவது அயிட்ட சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு தென்புறத்தில் பிரதிவாதிகளுக்கு காலை எண்.312/1G1ல் பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். காலை எண்.312/1G1ல் எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். தற்போது பிரதிவாதிகள் பூமி312/1G1A2, 312/1G1A3, என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின்

கிரைய ஆவணத்தை தான் நாங்கள் வா.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.11 ஆவணமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கிரைய ஆவணங்களிலும் சித்ரா வகையரா பூமிக்கு தெற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான்.

8. அந்த சித்ரா வகையறா என்பது என்னை குறிக்கும் என்றால் சரிதான். அதைப் பொறுத்து எனக்கு பூசல் இல்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்களில் கண்டுள்ள கிரைய சொத்திற்கு விஸ்தீரணம் மற்றும் நீள அகலங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் கிரைய ஆவணங்களில் விஸ்தீரணம் மட்டும் தான் கண்டுள்ளது என்றும், அதன் நீள அகலங்கள் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணமான பட்டாவில் 312/1F1B என உட்பிரிவு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. அதுதான் வாதிகளின் சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிகளின் இரண்டு பட்டாக்களை வா.சா.ஆ.12 ஆவணமாக ஒப்படைத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 புலவரைபடத்தில் 312/1F1B என்ற எனது இடத்தை நான் குறிப்பிட்ட அடையாளம் காட்டி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புலவரைபடத்தில் 312/1F1B யின் தென்புறத்தில் கிழமேலாக காட்டப்பட்டுள்ள கோடுதான் அத்து லைன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்டுள்ள அத்து லைனை பொறுத்து எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

10. அந்த அத்து லைனுக்கு தென்புறம் 312/1G பூமி உள்ளது என்றால் ஆமாம். அந்த அத்து லைனுக்கு தென்புறம் உள்ள 312/1G1 பூமியில் எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று தாவா சொத்துக்களை பார்வையிட்ட சமயத்தில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் இல்லை என்றால் பெண்கள் இருந்தார்கள். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் வாதி வீட்டிற்கு தென்புறம் பி, டி என காட்டப்பட்டுள்ளது எங்கள் அத்து என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் X,Y என காட்டப்பட்டுள்ள பகுதி 312/1G பகுதிக்குள் உள்ளது என்றால் ஆமாம்.

11. எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகள் கம்பி வேலி போட வந்ததாகத் தான் நான் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரிதான் எனது பூமிக்கும் பிரதிவாதி பூமிக்கும் இடையேயான அத்தை நிர்ணயம் செய்ய நான் சர்வேயர் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று தாவா சொத்துக்களை அளக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் நடவடிக்கை எடுத்தால் பிரதிவாதிகள் அவர்கள் பூமிக்குள் தான் கம்பிவேலி அமைக்க முயற்சி செய்தார்கள் என்ற விபரம் தெரிய வந்து விடும் என்ற காரணத்தினால் தான் நான் அவ்வாறு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

12. சர்வேயர் மூலம் தாவா சொத்துக்களை அளவீடு செய்தால் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பி, டி பகுதிக்கு தென்புறத்தில் உள்ள இடம் எனக்கு பாத்தியம் இல்லை என்ற விவரம் தெரியவந்துவிடும் என்பதால் தான் நான் அவ்வாறு அளவீடு செய்ய முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற

ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பி, டி என்று காட்டப்பட்டுள்ள பகுதிக்கு தென்புறமாக பிரதிவாதிகள் வீடு அமைந்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம். பி, டி பகுதிக்கு தென்புறமாக உள்ள காலி இடத்தை பிரதிவாதிகளின் காலியிடம் என்று நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம்.

13. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சி1, சி2 என்ற பொலிகல் எங்களால் வழக்கிற்காக நட்டு வைக்கப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை சர்வேயர் மூலம் முறையாக அளவிடாமல் சி1, சி2 பொலிகல் குறித்து நம்ப இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டில் தரை தளம் மற்றும் மேல் தளம் ஆகியவை கட்டி உள்ளோம் என்றால் சரிதான். எனது வீடு வடக்கு பார்த்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது தென்புற சுற்றில் 2-1/2 அடி நீளத்திற்கு ஜன்னல்களின் சன்சைடு நீட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. தென்புறத்தில் எத்தனை ஜன்னல்கள் உள்ளது என்றால் சுமார் 6 ஜன்னல்கள் இருக்கும் எங்கள் வீட்டின் தென்புற ஜன்னல்களின் சன்சைடுகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 312/1G பகுதியில் தான் நீட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எந்த வருடத்தில் வீடு கட்டினோம் என்றால் 2018 ஆம் ஆண்டில் இருந்தே வீடு கட்டி வருகிறோம். வெள்ளகோவில் நகராட்சிக்கு தாவா சொத்து உட்பட்டது என்றால் சரிதான். வீடு கட்டுவதற்கு வெள்ளகோவில் நகராட்சியில் உரிய அனுமதியும் ப்ளூ பிரிண்ட் வாங்கி உள்ளோமா என்றால் வாங்கி

உள்ளோம் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

15. நகராட்சியில் உரிய அனுமதி பெறாமல் நாங்கள் வீடு கட்டி உள்ளோம் என்றும், அதனால் தான் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நாங்கள் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அனுமதி வாங்காமல் நாங்கள் வீட்டு வரி மட்டும் கட்டி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்குரையோடு மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் எனது வீட்டின் தென்புறசுவர் பி, டி பகுதியோடு எங்கள் சொத்தின் அத்து முடிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அதற்கு தென்புறமுள்ள பகுதிகளில் அனைத்தும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 312/1G பகுதியில் உள்ள சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல.

16. 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டி உள்ளார்கள். 3, 4 பிரதிவாதிகள் வீடு கட்டவில்லை என்றால் சரிதான். அந்தப் பகுதியில் மனை பிரித்து உள்ளார்கள் மற்றவர்கள் நிலங்கள் நேராக உள்ளது. 1, 2 பிரதிவாதிகளின் நிலங்கள் மட்டும் கிராஸ் ஆக உள்ளது அது எவ்வாறு என்று எனக்கு தெரியவில்லை. சர்வேயர் மூலம் தாவா சொத்துக்களை அளவீடு செய்தால் தான் அது குறித்த விபரங்கள் சரியாக தெரியவரும் என்றால் ஆமாம். வழக்குரை சொத்து விவரத்தில் தாவா சொத்துக்களின் நீளம் மற்றும் அகலங்கள் குறித்து குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

17. நாங்கள் வழக்கில் கோரி உள்ள இரண்டாவது பரிகாரம் செல்லத்தக்கது அல்ல என்றும் அதில் சொல்லப்பட்டுள்ளவாறு அத்து கற்கள் எதுவும் நிலையில் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. பி, டி

பகுதிக்கு தென்புறத்தில் எங்களுக்கு பாத்தியம் உள்ளது என்று நாங்கள் சொல்லி உள்ள நிலையில் அதை பொருத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்து கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

18. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் பி, டி என்ற சுவற்றுக்கு தென்புறத்தில் சுவற்றுக்கு தென்புறத்தில் எனக்கு உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தை அபகரிக்க இந்த வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிராகரிக்கத்தக்கது மற்றும் தள்ளுபடியாகதக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.13 18:37:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்